மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது ஆய்வில் இருக்கிறது. ஆகவே இதை அனுமதிக்க முடியாது. அம்மையார் பேசிய பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்திர விடுகிறேன்.

(உ) போக்குவரத்து கழக ஊழியர் ஒருவர் உறுப்பினரிடம் நடந்து கொண்ட முறை குறித்து.

திருமதி ரமணி நல்லதம்பி: எல்லாம் ஆய்வில் இருந்தால் நான் எதைப்பற்றிப் பேசுவது. விதி 55-ன் கீழ் கொடுக்கப்பட்டதும் ஆய்வில் இருக்கிறது; அல்லது நிராகரிக்கப்படுகிறது. சட்ட மன்ற உறுப்பினராகிய என்னை இந்த அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பயணம் செய்கின்ற நேரத்தில் அந்தப் பேருந்தின் ஏஜெண்டு, என்னை அவமானப் படுத்தியவரை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது குறித்து நீங்கள் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு மனு கொடுத்திருக்கிறீர்கள். அந்த மனு உரிய அமைச்சர் அவர்களிடம் அனுப்பப் பட்டிருக்கிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அது பற்றி நீங்கள் இப்போது பேச வேண்டாம்.

முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சென்னை ராஜ் பவனில் தங்கியிருந்தபோது தேர்தல் உடன்பாடு குறித்துப் பேசியதாகக் கூறப்படுவது குறித்து.

10.55 மணி

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள், முன்னாள் பாரதப் பிரதமருக்கு அவர் எந்த மாநிலத்துக்குச் சென்றாலும் அங்கே தங்குவதற்கு ராஜ் பவனைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொல்லி எப்போதும்போல அவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களுக்கு எழுதி இருந்து முன்னாள் பாரதப்பிரதமர் அவர்கள் ராஜ் பவனில் தங்கி இருந்தார்கள். தங்கியிருக்கின்றபோது பாண்டிச்சேரிக்கும் நம்முடைய அரசியல் விஷயமாக, அலையன்ஸ், ** கூட்டு. கட்சியிலே தொகுதி பங்கீடு விஷயமாகப் பேசப்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.